1994 மே 4]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு மின்சார (பயனீட்டிற்கான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டிற்கான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டிற்கான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு எண்ணெய்ப்பனை (உற்பத்தி மற்றும் பதனிடுதலை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன் வடிவு, 1994 (ஆ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு எண்ணெய்ப்பனை (உற்பத்தி மற்றும் பதனிடுதலை ஒழுங்குமுறைப்படுத்துதல், சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.